(முழுப் பதிப்புரிமையுடையது)

# இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்

## இலங்கை நிர்வாக சேவை அலுவலர்களுக்கான இரண்டாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை 2013(1)

## அபிவிருத்தி நிர்வாகச் செயன்முறை (09)

**3 மணித்தியாலங்கள்**

**ஐந்து (05) வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்க.**

அனைத்து வினாக்களுக்கும் சமமான புள்ளிகள் வழங்கப்படும்

---

01. இலங்கையில் நல்லாட்சியை உறுதிப்படுத்துவதற்காக நிர்வாக இயந்திரம் (Administrative Machinery), நிர்வாக அரசுக்குச் (Administrative Regime) செய்ய முடியுமான ஆக்கபூர்வமான தாக்கங்களை விபரிக்குக.

02. நாட்டின் மனிதவள அபிவிருத்திச் செயன்முறையானது, நாட்டின் பொருளாதார அபிவிருத்தி இலக்குகளை நிறைவேற்றுவதை நோக்கமாகக் கொண்டு ஒழுங்கமைக்கப்படல் வேண்டும். இதனை அண்மையில் வெளியிடப்பட்ட தேசிய மனிதவள, தொழில் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

03. ஒரு நாட்டில் சட்டத்தின் ஆட்சியினை உறுதிப்படுத்துவதற்காக நிறைவேற்றுத்துறையும், சட்டவாக்கத்துறையும், நீதித்துறையும் ஒன்றுக்கு ஒன்று சுதந்திரமாகச் (Independent) செயற்பட வேண்டுமாயினும் ஒன்றிலிருந்து ஒன்று தொடர்பற்று (Mutually exclusive) அமையக் கூடாது. இக்கூற்றை விளக்குக.

04. இலங்கையில் இலவச சுகாதார சேவையின் தரத்தினை மேம்படுத்துவதற்காக சிவில் சமூக அமைப்புக்களினால் வழங்க முடியுமான பங்களிப்பினை விமர்சன ரீதியாக ஆராய்க.

05. இலங்கையில் அரச திணைக்களங்களோடு ஒப்பிடுகையில் அரச கூட்டுத்தாபனங்களில் நிர்வாகமும் நிதி முகாமையும் மிகவும் நெகிழும் தன்மை கொண்டவையாகக் காணப்படுகின்றன. இப்போக்கின் அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் பொருளாதாரத்தின் முக்கிய துறைகளுடன் தொடர்புபடுத்தி விமர்சன ரீதியாக ஆராய்க

06. உள்ளூராட்சி மன்றங்களின் சிறந்த செயற்பாடு நாட்டின் அபிவிருத்திக்கும் சமூக நலனோம்பலுக்கும் மிகச்சிறந்த பங்களிப்பினை வழங்கும். விமர்சன ரீதியாகக் கருத்துரைக்க.

07. பிரதேச மட்டத்தில் அபிவிருத்திச் செயல்முறையினை மிகவும் வினைத்திறன் மிக்கதாக, பயனுறுதிமிக்கதாக ஆக்குவதற்கு பிரதேச மட்ட அரசியல் அதிகாரங்களுக்கும் அரச நிறுவனங்களுக்கும் சிவில் சமூக நிறுவனங்களுக்கும் இடையில் மிகச் சிறந்த தொடர்பு காணப்படுவதன் அவசியத்தினை உதாரணங்களுடன் விளக்குக.

08. கீழ்வரும் தலைப்புகள் பற்றி சிறுகுறிப்பு எழுதுக.

(அ) மனித உரிமைகள் ஆணைக்குழு

(ஆ) பாராளுமன்ற ஆலோசனைக்குழு

(இ) மாகாணசபை நியதிச் சட்டங்கள்

(ஈ) பொதுமனுக்குழு

******************************